தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 22, திருவள்ளுவர் ஆண்டு—2052

2022 ஜனவரி 6, வியாழக்கிழமை

சென்னை—600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை யுடைய செயல்."

அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள், திருமதி ஜீனத் ஷெர்புதீன், திரு. ஆ. இராஜேந்திரன், திரு. தி.ப. மாயவன், திரு. கரு. முருகானந்தம், திரு. வெ. கோவிந்தன், திருமதி ஜெ. லோகாம்பாள், திரு. என். நன்மாறன், திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி, திரு. வே. கண்ணன், திரு. பெரி. சண்முகம், திரு. எஸ். அண்ணாமலை, டாக்டர் எம். மோசஸ் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திருமதி ஜீனத் ஷெர்புதீன் அவர்கள் 26–4–2021 அன்றும், திரு. ஆ. இராஜேந்திரன் அவர்கள் 2–10–2021 அன்றும், திரு. தி.ப. மாயவன் அவர்கள் 13–10–2021 அன்றும், திரு. கரு. முருகானந்தம் அவர்கள் 20–10–2021 அன்றும், திரு. வெ. கோவிந்தன் அவர்கள் 23–10–2021 அன்றும், திருமதி ஜெ. லோகாம்பாள் மற்றும் திரு. என். நன்மாறன் ஆகியோர் 28–10–2021 அன்றும், திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் 15–11–2021 அன்றும், திரு. வே. கண்ணன் அவர்கள் 18–11–2021 அன்றும், திரு. பெரி. சண்முகம் அவர்கள்*

29–11–2021 அன்றும், திரு. எஸ். அண்ணாமலை அவர்கள் 9–12–2021 அன்றும் மற்றும் டாக்டர் எம். மோசஸ் அவர்கள் 17–12–2021 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஜீனத் ஷெர்புதீன் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் சேப்பாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. ஆ. இராஜேந்திரன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் வீரபாண்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. தி.ப. மாயவன் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் திருவரங்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. கரு. முருகானந்தம் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் சிவகங்கை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. வெ. கோவிந்தன் அவர்கள் 1989–1991 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் பேரணாம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திருமதி ஜெ. லோகாம்பாள் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் லால்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. என். நன்மாறன் அவர்கள் 2001–2006 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் மதுரை கிழக்கு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் பூங்கா நகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

2022 ஜனவரி 6] [பேரவைத் தலைவர்]

திரு. வே. கண்ணன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் செஞ்சி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பெரி. சண்முகம் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் திருவாடனை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. எஸ். அண்ணாமலை அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் ஆலந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

டாக்டர் எம். மோசஸ் அவர்கள் 1971–1976, 1989–1991, 1991–1996 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் நாகர்கோவில் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1978–1984 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10–05

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) டாக்டர் கோ. ரோசய்யா, தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானங்கள். தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் டாக்டர் கோ. ரோசய்யா அவர்கள்